மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், எடப்பாடி

முன்னிலை : திரு. எஸ்.ஆர்.பாபு, பி.ஏ., பி.எல்.,

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர்(மு.கூ.பொ), எடப்பாடி

2025 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 28-ஆம் நாள் வெள்ளிக்கிழமை

ஆண்டுப்பட்டிகை வழக்கு எண். **134 / 2023**

**(CNR.No. TNSA1E-000833 -2023)**

| | | |
|---|---|---|
| குற்றமுறையீட்டாளர் | - | அரசு தரப்பில் காவல் ஆய்வாளர்,<br>அனைத்து மகளிர் காவல் நிலையம், சங்ககிரி<br>குற்ற எண். 04/2023 |
| குற்றம் சாட்டப்பட்டவர்கள் | - | 1. பாலாஜி (27), த/பெ. பழனிசாமி<br>வி.மேட்டுப்பாளையம், வெள்ளாளபுரம், எடப்பாடி தாலுக்கா, சேலம் மாவட்டம்.<br>2. சக்திவேல் (41), த/பெ. கந்தசாமி<br>நத்தகாடு, சின்னப்பம்பட்டி, வெள்ளாளபுரம் கிராமம், எடப்பாடி தாலுக்கா, சேலம் மாவட்டம்.<br>3. உமாமகேஸ்வரி (37), க/பெ. சக்திவேல்<br>நத்தகாடு, சின்னப்பம்பட்டி, வெள்ளாளபுரம் கிராமம், எடப்பாடி தாலுக்கா, சேலம் மாவட்டம்<br>4. பழனிசாமி (58), த/பெ. அரிமுத்து<br>அருந்ததியர் தெரு, வி.மேட்டுப்பாளையம், வெள்ளாளபுரம், எடப்பாடி தாலுக்கா, சேலம் மாவட்டம்.<br>5. கண்ணம்மாள் (51), க/பெ. பழனிசாமி<br>அருந்ததியர் தெரு, வி.மேட்டுப்பாளையம், வெள்ளாளபுரம், எடப்பாடி தாலுக்கா, சேலம் மாவட்டம். |
| வனையப்பட்ட குற்றங்கள் | - | U/s. 9, 10, 11 of Prohibition of Child Marriage Act - 2006 |

**28.03.2025**

| | | |
|---|---|---|
| குற்றம் நிகழ்ந்த நாள் | | 28.02.2023 |
| தகவல் தெரிவிக்கப்பட்ட நாள் | - | 22.03.2023 |
| எதிரிகள் கைது செய்யப்பட்ட நாள் | - | A1 to A5 are anticipatory bail |
| எதிரிகள் பிணையில் விடுவிக்கப்பட்ட நாள் | - | A1 to A5 - 14.06.2023 |
| வழக்கு இறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட்ட நாள் | | 01.07.2023 |
| குவிமுச.பிரிவு.240-இன் கீழ் எதிரிகளிடம் குற்றச்சாட்டு குறித்து கேள்வி கேட்கப்பட்ட நாள் | - | 21.06.2024 |
| சாட்சிகள் விசாரணை தொடங்கிய நாள் | - | 06.03.2025 |
| சாட்சிகள் விசாரணை முடிவடைந்த நாள் | - | 21.03.2025 |
| குவிமுச.பிரிவு.311-இன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட மனுக்களின் விவரம் | - | Nil |
| குவிமுச.பிரிவு.313(1)(ஆ)-இன் கீழ் எதிரிகளிடம் கேள்வி கேட்கப்பட்ட நாள் | - | 27.03.2025 |
| தலைமறைவு எதிரிகள் குறித்த விவரம் | - | Nil |
| நீதிமன்ற வழக்கு விசாரணைக்கு விதிக்கப்பட்ட தடை குறித்த விவரம் | - | Nil |

**28.03.2025**

| | | |
|---|---|---|
| தீர்மானம் | - | எதிரிகள் 9, 10, 11 of Prohibition of Child Marriage Act - பிரிவுகளின் கீழ் குற்றவாளிகள் இல்லை. |
| முடிவு | - | இறுதியாக, 1 முதல் 5 வரையிலான எதிரிகள் மீது சுமத்தப்பட்ட 9, 10, 11 of Prohibition of Child Marriage Act பிரிவுகளின் கீழான குற்றச்சாட்டுக்களும், அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்று முடிவு செய்து, சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு அளித்து, மேற்படி பிரிவுகளின் கீழ் குற்றவாளிகள் இல்லை என்று முடிவு செய்து, 1 முதல் 5 வரையிலான எதிரிகளை கு.வி.மு.ச பிரிவு 248(1) - ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.<br>இவ்வழக்கில் வழக்கு சொத்து இல்லை. |

இந்த வழக்கானது கடந்த 18.08.2023 அன்று இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுத்துக் கொள்ளப்பட்டு, அரசுக்காக அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் நிலை 2 அவர்களும், எதிரிகளுக்காக வழக்கறிஞர் திரு.R.காந்திமதி அவர்கள் ஆஜராகியும், இருதரப்பும் கேட்டறிந்தும், வழக்காவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்ற விசாரணையில் இருந்து வந்த இவ்வழக்கில் இந்நீதிமன்றம் இன்று வழங்கும்,

**28.03.2025**

தீ ர் ப் பு ரை

சங்ககிரி அனைத்து மகளிர் காவல் நிலைய காவல் ஆய்வாளர் எதிரிகள் மீது தாக்கல் செய்யப்பட்டுள்ள குற்ற இறுதி அறிக்கையின் விவரம்

2. 1) பாதிக்கப்பட்ட சிறுமியின் பெற்றோர்களான 2, 3 எதிரிகள் திருமண வயதாகாத சிறுமியான தனது மகள் வின்மதிக்கு 1-ம் எதிரியை திருமணம் செய்து வைக்க முடிவு செய்து சம்மதம் தெரிவித்த குற்றத்திற்காக 2, 3 -ம் எதிரிகள் மீது சட்டப்பிரிவு 11 of Prohibition of Child Marriage Act -ன் கீழும்,

2. 2) மேற்படி அதே தேதி, அதே நேரம், அதே இடத்தில் வைத்து அதே சம்பவத்தின் தொடர்ச்சியாக, திருமண வயதாகாத சிறுமியை 1ம் எதிரிக்கு திருமணம் செய்து வைக்க முடிவு செய்து 2 முதல் 5 எதிரிகள் கடந்த 28.02.2023-ம் தேதி காலை சுமார் 06.30 மணிக்கு சின்னப்பம்பட்டி எல்லனூரில் உள்ள வினாயகர் கோயிலில் வைத்து 1-ம் எதிரிக்கு, சிறுமியை குழந்தை திருமணம் செய்து வைத்த குற்றத்திற்காக 2 முதல் 5 வரையிலான எதிரிகள் மீது சட்டப்பிரிவு 11 of Prohibition of Child Marriage Act -ன் கீழும்,

2. 3) மேற்படி அதே தேதி, அதே நேரம், அதே இடத்தில் வைத்து அதே சம்பவத்தின் போது, மேற்படி கோவிலில் வைத்து 1-ம் எதிரியானவர் திருமண வயதாகாத சிறுமி வின்மதியின் கழுத்தில் தாலி கட்டி குழந்தை திருமணம் செய்த குற்றத்திற்காக 1-ம் எதிரி மீது சட்டப்பிரிவு 9 of Prohibition of Child Marriage Act -ன் கீழும் சங்ககிரி அனைத்து மகளிர் காவல் நிலைய காவல் ஆய்வாளர்

இந்நீதிமன்றத்தில் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

3. 1 முதல் 5 வரையிலான எதிரிகள் இந்நீதிமன்றத்தில் ஆஜரானவுடன் குவிமுச பிரிவு 207-ன் கீழ் வழக்காவணங்களின் நகல்கள் இலவசமாக வழங்கப்பட்டு போதிய கால அவகாசம் கொடுத்த பின்னர் எதிரிகளிடம் சட்டப்பிரிவுகள் 9, 10, 11 of Prohibition of Child Marriage Act -ன் கீழான குற்றங்கள் பற்றி வினவ எதிரிகள் குற்றங்களை மறுத்தார்கள். எனவே அரசு தரப்பு சாட்சிகள் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

4. **<u>அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியத்தின் சாராம்சம் பின்வருமாறு</u> : -**

4. 1) அ.சா.1 தனது சாட்சியத்தில், கடந்த 28.02.2023 - ஆம் தேதி Child line மின்னஞ்சல் மூலம் வரப்பெற்ற புகாரின் பேரில் கொங்கணாபுரம் ஊராட்சி அலுவலர் மற்றும் விரிவாக்க அலுவலர் ஆகியோர்களை அனுப்பி விசாரணை செய்ததில் சின்னப்பம்பட்டி, நத்தக்காடு என்ற முகவரியில் வசிக்கும் சக்திவேல், உமாமகேஸ்வரி என்பவர்களது மகள் வின்மதி(16) என்ற சிறுமிக்கும், மேட்டுப்பாளையத்தை சேர்ந்த பழனிசாமி, கண்ணம்மாள் ஆகியோரின் மகன் பாலாஜி (27) என்பவருடன் குழந்தை திருமணம் நடைபெற்றுள்ளதாகவும், இத்திருமணம் சிறுமியின் பெற்றோரின் வற்புறுத்தலின்பேரில் 28.02.2023 ஆம் தேதி காலை சுமார் 06.30 மணிக்கு எல்லானூரிலுள்ள விநாயகர் கோவிலில் இருவீட்டின் பெற்றோர்கள் முன்னிலையில் திருமணம் நடந்துள்ளதாகவும், அதனால் ந.க.எண்.73/ஆ 2/2023, நாள். 14.03.2023 -ன் படி குழந்தை திருமணம் செய்து கொண்ட பாலாஜி மற்றும்

இருதரப்பு பெற்றோர்களின் மீது நடவடிக்கை எடுக்கும்படி புகார் **(அ.சா.ஆ.1)** மனுவை சங்ககிரி அனைத்து மகளிர் காவல் நிலைய காவல் ஆய்வாளருக்கு அனுப்பியதாகவும் சாட்சியமளித்துள்ளார்.

4.2) அ.சா.3 திருமதி.சாரதா, காவல் உதவி ஆய்வாளர் தனது சாட்சியத்தில், கடந்த 22.03.2023 -ம் தேதி 12.00 மணிக்கு சங்ககிரி அனைத்து மகளிர் காவல்நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணியில் இருந்தபோது சேலம் மாவட்ட சமூக நல அலுவலர் அவர்களிடம் இருந்து தபால் மூலம் வரப்பெற்ற புகாரினை பெற்று, சங்ககிரி அனைத்து மகளிர் காவல் நிலைய குற்ற எண்.04/2023, சட்டப்பிரிவு 9, 10 & 11 Prohibition of Child Marriage Act 2006 -ன் கீழ் முதல் தகவல் அறிக்கை **(அ.சா.ஆ.2)** பதிவு செய்துள்ளதாகவும்,

4.3) அ.சா.4 திருமதி.வளர்மதி, காவல் ஆய்வாளர் தனது சாட்சியத்தில், கடந்த 22.03.2023 ஆம் தேதி மதியம் 12.00 மணிக்கு சங்ககிரி அனைத்து மகளிர் காவல் நிலைய உதவி ஆய்வாளர் திருமதி.சாரதா என்பவர் நிலைய அலுவலில் இருந்தபோது, சேலம் மாவட்ட சமூக நல அலுவலர் அவர்களிடம் இருந்து தபால் மூலம் வரப்பெற்ற புகாரினை பெற்று, சங்ககிரி அனைத்து மகளிர் காவல் நிலைய குற்ற எண்.04/2023, சட்டப்பிரிவு 9, 10 & 11 Prohibition of Child Marriage Act 2006 -ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து, தனது பார்வைக்கு வைத்ததாகவும்,

4. 4) பின்னர் இவ்வழக்கினை புலன்விசாரணைக்கு எடுத்துக்கொண்டு,

அன்றைய தினமே மதியம் 14.00 மணிக்கு முதல் சம்பவயிடமான எல்லனூரிலுள்ள விநாயகர் கோவில் சென்று சாட்சிகள் காவேரி மற்றும் பாரதி ஆகியோர் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர்-I **(அ.சா.ஆ.3)** மற்றும் மாதிரி வரைபடம் -I **(அ.சா.ஆ.5)** தயார் செய்ததாகவும், பின்னர் வழக்கின் இரண்டாவது சம்பவயிடமான வி.மேட்டுப்பாளையம், அருந்ததியர் காலணியில் பழனிசாமியின் வீட்டிற்கு சென்று சாட்சிகள் காவேரி மற்றும் பாரதி ஆகியோர் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர்-II **(அ.சா.ஆ.4)** மற்றும் மாதிரி வரைபடம் -II **(அ.சா.ஆ.6)** தயார் செய்ததாகவும், இரண்டு பார்வை மகஜர்களிலும் சாட்சிகளின் கையொப்பம் பெற்றதாகவும், பின்னர் அன்றைய தினமே சாட்சிகள் ஜெனிபர் சோனியாராணி, பாப்பு, நித்யா, தர்மதுரை, காவேரி, பாரதி ஆகியோர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்ததாகவும்,

4.5) பின்னர், 22.03.2023 ஆம் தேதி சாட்சி ஜெனிபர்சோனியாராணி அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், பின்னர் 23.03.2023 ஆம் தேதி சிறுமி வின்மதி என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், பின்னர் 29.03.2023 ஆம் தேதி பாதிக்கப்பட்ட சிறுமிக்கு 164 கு.வி.மு.ச -ன் படி வாக்குமூலம் பதிவு செய்ய பெண் தலைமைக்காவலர் 969 அமுதா என்பவர் சங்ககிரி குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2 அவர்கள் முன்பு ஆஜர்படுத்தி 164 வாக்குமூலம் (**அ.சா.ஆ.7**) பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும்,

**4.6)** பின்னர் 30.03.2023 ஆம் தேதி பள்ளி கல்வி சான்று கேட்டு

சாரதா காலேஜ் முதல்வர் அவர்களுக்கு வேண்டுகோள் கடிதம் கொடுத்து, பாதிக்கப்பட்ட சிறுமியின் கல்வி சான்று **(அ.சா.ஆ.8)** பெற்றதாகவும், பின்னர், அன்றைய தினமே காலேஜ் முதல்வர் திருமதி.உமாராணி அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தும், பின்னர் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த காவல் உதவி ஆய்வாளர் திருமதி.சாரதா அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், பின்னர் 14.06.2023 ஆம் தேதி எதிரிக்கு படிப்பு சான்று கேட்டு சின்னப்பம்பட்டி அரசு மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர் திரு.ஆறுமுகம் அவர்களுக்கு வேண்டுகோள் கடிதம் கொடுத்து, எதிரி பாலாஜியின் கல்வி சான்று **(அ.சா.ஆ.9)** பெற்றதாகவும், பின்னர் பள்ளி கல்வி சான்று வழங்கிய தலைமை ஆசிரியர் திரு.ஆறுமுகம் அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்ததாகவும்,

4.7) பின்னர் 15.06.2023 ம் தேதி 1 முதல் 5 வரையிலான எதிரிகள் சென்னை உயர்நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்து முன் பிணை பெற்றுவிட்டபடியால் தான் தனியாக அவர்களை கைது செய்யவில்லை என்றும், பின்னர் புலன் விசாரணை முடித்து எதிரிகள் மீது சட்டப்பிரிவு 9, 10 & 11 Prohibition of Child Marriage Act 2006 -ன் படி கடந்த 01.07.2023-ம் தேதி குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளதாக சாட்சியமளித்துள்ளார்.

5. அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியம் முடிவடைந்த பிறகு எதிரிகளுக்கு பாதகமாக தோன்றக் கூடிய அம்சங்கள் குறித்து கு.வி.மு.ச.பிரிவு 313(1)(b)-ன் கீழ் தொகுத்து வினவிய போது எதிரிகள் அதனை மறுத்தார்கள்.

எதிரிகள் தனது தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை என்று கூறினார்.

6. தற்பொழுது இந்த வழக்கில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனை என்னவென்றால் எதிரிகள் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டை அரசு தரப்பு சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபித்துள்ளதா? இல்லையா? என்பதேயாகும்.

7. அரசுதரப்பில் அ.சா.1, அ.சா.4 ஆகிய சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டும், அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.9 வரையிலான ஆவணங்களும் குறியீடு செய்யப்பட்டுள்ளது. இவ்வழக்கில் பட்டியல் சாட்சிகளான 2 முதல் 9 மற்றும் 11 ஆகியோர்கள் அரசு தரப்பில் விசாரணை செய்யப்படாமல் நீக்கரவு செய்யப்பட்டுள்ளார்கள். எதிரிகள் தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை, ஆவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

**விவாதம், தீர்வு மற்றும் தீர்வுக்கான காரணம்:**

8. இருதரப்பும் கேட்கப்பட்டது வழக்கு ஆவணங்கள் நன்கு பரிசீலிக்கப்பட்டது.

9. அரசுத்தரப்பில் முன்னிலையான கற்றறிந்த வழக்கறிஞர் அவர்கள் தமது வாதத்தில் எதிரிகள் மீதான குற்றச்சாட்டு அரசுத்தரப்பில் விசாரிக்கப்பட்ட அ.சா.1 முதல் அ.சா.4 ஆகிய சாட்சிகளின் வாய்மொழி சாட்சியம் மற்றும் அரசுத்தரப்பில் முன்னிலைப்படுத்தப்பட்ட அ.சா.ஆ.1 முதல் 9 வரையிலான ஆவண சாட்சியங்கள் மூலமாகவும் சந்தேகத்திற்கு இடமின்றி எதிரிகள் மீதான குற்றச்சாட்டு நிரூபணம் செய்யப்பட்டுள்ளதால் எதிரிகள் உரிய சட்டப்பிரிவின் கீழ் தண்டிக்கத்தக்கவர் என்று

வாதிட்டார்.

10. மாறாக எதிரிகள் தரப்பில் முன்னிலையான கற்றறிந்த வழக்கறிஞர் அவர்கள் தம்முடைய வாதத்தில் இவ்வழக்கில் பாதிக்கப்பட்ட சிறுமி அ.சா.2 அரசு தரப்பிற்கு எதிராக சாட்சியம் அளித்துள்ளதாகவும், எனவே தனிநபர் சாட்சிகளால் உறுதியூட்டப்படாத புலன் விசாரணை அதிகாரியின் சாட்சியத்தினை மட்டும் கொண்டு எதிரிகள் மீதான குற்றம் நிரூபணம் செய்யப்பட்டதாக எடுத்துக்கொள்ள முடியாது என்றும், எனவே எதிரிகளை விடுதலை செய்ய வேண்டும் என்றும் வாதிட்டார்.

11. இவ்வழக்கில் புகார்தாரர் அ.சா.1- ஆகவும், பாதிக்கப்பட்ட சிறுமி அ.சா.2 - ஆகவும், முதல் புலன் விசாரணை அதிகாரி அ.சா.3 - ஆகவும், புலன்விசாரணை அதிகாரி அ.சா.4 ஆகவும் விசாரிக்கப்பட்டுள்ளனர்.

12. 1) இவ்வழக்கில் எதிரிகள் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கள் அரசுதரப்பில் நிரூபிக்கப்பட்டுள்ளதா என்று பரிசீலிக்கும்போது, அ.சா.2 தனது சாட்சியத்தில், ஆஜர் எதிரிகளில் 2 மற்றும் 3-ம் எதிரிகள் தனது பெற்றோர்கள் என்றும், மற்றவர்களை தனக்கு தெரியாது என்றும், சேலம் Child line -லிருந்து சுமார் 02 ஆண்டுகளுக்கு முன்பு தன்னிடம் குழந்தை திருமணம் நடந்ததா என்று தன்னை விசாரித்தார்கள் என்றும், தான் திருமணம் நடக்கவில்லை என்று சொன்னதாகவும், சேலம் Child line -லிருந்து தன்னை Home -க்கு அழைத்து சென்று அங்கு தான் ஒரு மாதம் இருந்ததாகவும், இது குறித்து மாவட்ட சமூக நல அலுவலர் தன்னை திருமணம் நடைபெற்றது குறித்து விசாரித்தபோது, தான் அவரிடம்

திருமணம் நடைபெறவில்லையென்று சொன்னதாகவும் சாட்சியம் அளித்துள்ளார்.

12. 2) மேற்படி அ.சா.1-ன் சாட்சியத்தை பரிசீலிக்கும்போது, அ.சா.ஆ.2 புகாருக்கு முற்றிலும் முரணாக அ.சா.2 சாட்சியம் அளித்துள்ளார் என்பது தெரியவருகிறது. கடந்த 28.02.2023 ஆம் தேதி 18 வயதை பூர்த்தியடையாத அ.சா.2 க்கும், 1-ம் எதிரிக்கும் அவர்களின் பெற்றோர்களான 2 முதல் 5 வரையிலான எதிரிகள் திருமணம் செய்து வைத்ததாக அ.சா.1 தெரிவிக்கப்பட்டுள்ள நிலையில் 1-ம் எதிரியை தனக்கு தெரியாது என்றும், 1-ம் எதிரிக்கும், தனக்கும் திருமணம் நடைபெறவில்லை என்றும் அ.சா-2 சாட்சியம் அளித்துள்ள நிலையில் மேற்படி திருமணம் நடைபெற்றதை நிரூபிக்கும் விதமாக மற்ற சாட்சிகளோ, சான்றாவணங்களோ அரசுதரப்பில் முன்னிலைப்படுத்தப்படவில்லை. மேலும் அ.சா.2-ன் சாட்சியத்தை பரிசீலிக்கும்போது அ.சா.2-க்கு பாலமுருகன் என்பவருடன் திருமணம் நடைபெற்றுள்ளது தெரியவருகிறது. எனவே 1-ம் எதிரிக்கும், அ.சா.2 க்கும் கடந்த 28.02.2023 ஆம் தேதி திருமணம் நடைபெற்றது என்பதை அரசுதரப்பில் போதிய சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் நிரூபிக்கவில்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

13. இறுதியாக, எதிரிகள் மீது சுமத்தப்பட்ட 9, 10, 11 of Prohibition of Child Marriage Act பிரிவுகளின் கீழான குற்றச்சாட்டுக்கள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்று முடிவு செய்து, சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு அளித்து, மேற்படி பிரிவுகளின் கீழ் எதிரிகள்

குற்றவாளிகள் இல்லை என்று முடிவு செய்து, 1 முதல் 5 வரையிலான எதிரிகளை கு.வி.மு.ச பிரிவு 248(1) - ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

இவ்வழக்கில் வழக்கு சொத்து இல்லை.

எதிரிகள் பிணையில் இருந்து வந்துள்ள நிலையில் மேல்முறையீட்டு காலத்திற்குள் யாரும் இவ்வழக்கில் மேல்முறையீடு செய்யவில்லையெனில் எதிரிகளின் பிணை பத்திரம் ரத்து செய்திடவும் உத்தரவிடப்படுகிறது.

இந்தத் தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின் என்னால் பிழை திருத்தம் செய்து, இன்று 28.03.2025 - ம் தேதி அவையறிய பகரப்பட்டது.

Sd/-S.R.பாபு,<br>
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், (மு.கூ.பொ)<br>
எடப்பாடி.

**அரசுதரப்புசாட்சிகள்**:-

| | |
|---|---|
| அ.சா.1 | ஜெனிபர்சோணியாராணி, புகார்தாரர் |
| அ.சா.2 | திருமதி.வின்மதி, பாதிக்கப்பட்ட சிறுமி |
| அ.சா.3 | திருமதி.சாரதா, காவல் உதவி ஆய்வாளர் |
| அ.சா.4 | திருமதி.வளர்மதி, காவல் உதவி ஆய்வாளர் |

**அரசு தரப்பு சான்றாவணங்கள்**:

| | |
|---|---|
| அ.சா.ஆ.1 | 22.03.2023 புகார் |
| அ.சா.ஆ.2 | 22.03.2023 முதல் தகவல் அறிக்கை |

**28.03.2025**

அ.சா.ஆ.3 22.03.2023 பார்வை மகசர் I

அ.சா.ஆ.4 22.03.2023 பார்வை மகசர் II

அ.சா.ஆ.5 22.03.2023 மாதிரி வரைபடம் I

அ.சா.ஆ.6 22.03.2023 மாதிரி வரைபடம் II

அ.சா.ஆ.7 29.03.2023 164 வாக்குமூலம்

அ.சா.ஆ.8 30.03.2023 பாதிக்கப்பட்ட சிறுமியின் கல்வி சான்று

அ.சா.ஆ.9 14.06.2023 பாலாஜியின் கல்வி சான்று

**சான்றுப்பொருள்** : இல்லை

**எதிரிகள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்**: இல்லை

**குறிப்புகள்**:

1) விசாரணை காலத்தில் எதிரிகள் பிணையில் இருந்து வருகிறார்.
2) வழக்கின் சாட்சிகள் 3 வாய்தாவிற்கு மேல் விசாரணையின்றி நிறுத்தப்படவில்லை.
3) வழக்கின் முடிவு சம்மந்தப்பட்ட காவல் துறையினருக்கு தெரிவிக்கப்பட்டது.

Sd/-S.R.பாபு,
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், (மு.கூ.பொ)
எடப்பாடி.

**28.03.2025**